பக்கங்கள் 16+3

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2056 | தை 10 வியாழக்கிழமை 23.01.2025 | அதிர்வு 175

## ஆவரங்கால் விபத்தில் இளைஞர் உயிரிழப்பு



யாழ்ப்பாணம், ஆவரங்கால் பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ள

02

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



### யாழ்ப்பாணம் கலாசார நிலையத்துக்கு

# திடீர் பெயர் மாற்றம் எதற்காக? இந்தியத் தூதரகப் பதில் என்ன?

### விசனத்துடன் வினவுகின்றார் விக்கி

"யாழுப்பாணம் கலாசார நிலையத்தின் பெயர் மாற்றத்திற்கான பொறுப்பு இந்தியத் தூதரகத்தின் அலுவலகத்தின் மீதே விழுகிறது. இந்தத் திடீர் மாற்றத்திற்கான விளக்கத்தைக் கௌரவத்துக்கு உரியவர் அளிக்க வேண்டும் என்பதை தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்."

- இவ்வாறு வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் யாழ். மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன்

02



# சாணக்கியனுக்கு 50 ஆயிரம் ரூபா வழங்குமாறு பிள்ளையானுக்குக் கல்கிஸை நீதிமன்று உத்தரவு

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தன்னை அவமதித்துக் கருத்து வெளியிட்டார் எனக்குற்றஞ்சாட்டிமுன்னாள்இராஜாங்க அமைச்சரும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவருமான சிவனேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) கல்கிஸை மாவட்ட

02

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகள் வெளியாகின

2024 ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் பெறுபேறுகள் இன்று மாலை வெளியிடப்பட்டுள்ளன.

அதன்படி, https://www.doenets.lk/examresults என்ற இணையத் தளத்திற்குச் சென்று பெறுபேறுகளைப் பார்வையிட முடியும் என்று



பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

கடந்த செப்டெம்பர் 15 ஆம் திகதி நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு மொத்தமாக 3 இலட்சத்து 23 ஆயிரத்து 879 மாணவர்கள் தோற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வவுனியாவில் 40 ஏக்கர் வயல் காணிகள் பாதிப்பு



**(கி.வசந்தன்)**

வவுனியா மாவட்டத்தில் நிலவும் தொடர் மழை காரணமாக செட்டிகுளம், ஆண்டியாபுளியங்குளம், ராமையன்குளம் பகுதியில் சுமார் 40 ஏக்கர் வயல் காணிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

குறிப்பாக வவுனியா பாவற்குளம் குளத்தின் நான்கு வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ள நிலையில் அந்த நீர் வழிந்தோடும் பகுதியின் கீழுள்ள வயல் நிலங்களே இவ்வாறு பாதிப்படைந்துள்ளன.

மேலும் அறுவடைக்குத் தயாராக இருந்த நிலையில் நெற்பயிர்கள் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளன என்று விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

வெள்ள நீர் தொடர்ச்சியாகப் பயிர்களுக்கு மேலாக மூடிப் பாய்ந்து வருவதாகவும், இதனால் தமது விவசாயம் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளதுடன் தமது வாழ்வாதாரம் கேள்விக் குறியாகியுள்ளதாகவும் விவசாயிகள் தெரிவித்தனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### திடீர் பெயர் மாற்றம்...

தெரிவித்திருக்கின்றார்.

'திருவள்ளுவர் கலாசர மையம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டதற்கு வருத்தம்' என்ற தலைப்பில் இந்த விடயத்தையொட்டி சிறு குறிப்பு ஒன்றை அவர் இன்று ஆங்கிலத்தில் வெளியிட்டுள்ளார். அதில் அவர் கூறியிருப்பவை வருமாறு:-

"யாழ். குடாநாட்டு மக்கள் வழியாக இலங்கைக்கு இந்தியா வழங்கிய கொடை யாழ் கலாசார நிலையம்.

இது, இதுவரை 'யாழ்ப்பாணம் கலாசார நிலையம்' என்றே அழைக்கப்பட்டது. 'திருவள்ளுவர் கலாசார மையம்' என்று பெயர் மாற்ற உங்களைத் தூண்டியது எது?

தமிழ் மொழிக்கு ஏன் தாழ்வு நிலை? பதினாறாவது திருத்தத்தின் கீழ் தமிழ் மொழி (வடக்கு, கிழக்கில்) முதன்மையானதாக முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது.

அத்தகைய (பெயர்) மாற்றத்தை அரசாங்கம் செய்திருந்தால் அவர்கள் இதை (தமிழ் முன்னிலைப்படுத்தப்பட்டதை) அறிந்திருப்பார்கள். அமைச்சர் சந்திரசேகரன் (பெயர்ப் பதாகை) திறக்கப்படுவதற்கு முன் இந்த மாற்றம் பற்றி தெரியாது என்று மறுத்துள்ளார். எனவே, மாற்றத்திற்கான பொறுப்பு தூதரகத்தின் அலுவலகத்தின் மீதே விழுகின்றது.

இந்தத் திடீர் மாற்றத்திற்கு கௌரவத்துக்குரிய நீங்கள் விளக்கம் அளிக்க வேண்டும் என்பதை தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்." - என்றுள்ளது.

### ஆவரங்கால் விபத்தில்...

நிலையில் மற்றுமொரு இளைஞர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

அச்சுவேலி தெற்கைச் சேர்ந்த உதயகுமார் விதுஷன் (வயது 32) எனும் இளைஞரே உயிரிழந்துள்ளார். கரவெட்டியைச் சேர்ந்த தேவமனோகரன் பிரணவன் (வயது 23) எனும் இளைஞர் படுகாயமடைந்துள்ளார்.

நேற்று புதன்கிழமை யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதியில் யாழ்ப்பாணத்தில் இருந்து பருத்தித்துறை நோக்கி மோட்டார் சைக்கிள் பயணித்த இளைஞர், வீதியில் மாடுகளைச் சாய்த்துச் சென்ற இளைஞருடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளார்.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞரும், மாடுகளை சாய்த்துச் சென்ற இளைஞரும் படுகாயமடைந்த நிலையில், வீதியில் சென்றவர்கள் இருவரையும் மீட்டு வைத்தியசாலையில் சேர்த்தனர்.

எனினும், மாடுகளைச் சாய்த்துச் சென்ற இளைஞர் வைத்தியசாலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிள் ஓட்டியான இளைஞர் தொடர்ந்தும் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

சம்பவம் தொடர்பில் அச்சுவேலி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

### சாணக்கியனுக்கு...

நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

இந்த வழக்கு தொடர்பில் இன்று நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் கல்கிஸை மாவட்ட நீதிமன்றத்தில் முன்னிலையாகினார். அவரின் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் ஆஜரானார்.

வழக்குத் தாக்கல் செய்த சிவனேசதுரை சந்திரகாந்தன் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. இதன்போது, எதிர்மறை தரப்பின் சட்ட நுண்ணறிவாளர் சுமந்திரன், இந்த வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொள்ள இந்த நீதிமன்றத்துக்கு



உடைமையாக்கும் அதிகாரம் இல்லை என வாதத்தை முன்வைத்தார்.

வழக்கு விசாரணைக்குத் தேவையான ஆவணங்கள் மற்றும் கோப்புக்கள் சமர்ப்பிக்கப்படாத காரணத்தால், வழக்குத் தாக்கல் செய்த சிவனேசதுரை சந்திரகாந்தன் வழக்குச் செலவினமாக எதிர்த்தரப்புக்கு 50 ஆயிரம் ரூபாவை வழங்க வேண்டும் என்று நீதிமன்றம் உத்தரவிட்டது.

மேலும், இவ்வழக்கின் அடுத்த வழக்கு விசாரணை ஏப்ரல் 22 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

சுமந்திரன், இந்த விவகாரம் தொடர்பாக தனது கருத்துகளை ஊடகங்களுக்கு விளக்கமாக வெளியிட்டார்.



# தோட்ட மக்களின் சம்பளத்தையும் அரசு கட்டாயம் அதிகரிக்க வேண்டும்

## நாடாளுமன்றில் மனோ எம்.பி. கோரிக்கை

“2025 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் அரச சேவையாளர்களின் சம்பளத்தை அதிகரித்தால் பெருந்தோட்ட மக்களின் சம்பளத்தையும் அதிகரிக்க வேண்டும். ஏனெனில் எமது மக்கள் இன்றும் பல நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துள்ளார்கள். தினசரி சம்பளத்தை 2000 ரூபாவாக அதிகரிக்க வேண்டும்.” – என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம். பி. கோரிக்கை விடுத்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற கிளின் ஸ்ரீலங்கா செயற்றிட்டம் மீதான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கோரினார்.

அவர் மேலும் உரையாற்றியதாவது, ”நாடாளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற அமர்வில் பிரதமர் ஹரிணி அமரசூரிய உரையாற்றுகையில் நாடாளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் குறிப்பிட்ட விடயங்களுக்குப் பதிலளித்துக் கொண்டிருந்தார்.

அப்போது சபைக்குத் தலைமை தாங்கியவரின் அனுமதியுடன், நான் பிரதமரை நோக்கிக் கடந்த கால அரசைப் போல் இல்லாமல் கிளின் ஸ்ரீலங்கா செயற்றிட்டத்தின் எண்ணக்கருவை எடுத்துரைக்குமாறு குறிப்பிட்டேன்.

இதற்குப் பிரதமர் நாடாளுமன்றத்தில் எவ்வாறு உரையாற்ற வேண்டும் என்று எனக்குக் கற்பிக்க வேண்டாம் என்று ஆவேசமாகக் குறிப்பிட்டார். பிரதமர் வழங்கிய பதில் முறையற்றது. பிரதமருக்குக் கற்பிக்க வேண்டிய அவசியம் எனக்குக் கிடையாது. அதற்கான நேரமும் எனக்கில்லை.

எதிர்க்கட்சியினரின் செயற்பாடுகள் கவலைக்குரியவை என்று பிரதமர் குறிப்பிட்டார். உண்மையில் அரசின் செயற்பாடுகள் எமக்கும் கவலைதான் அளிக்கின்றது. பிரதமரின் கோபம் மற்றும் ஆத்திரத்தை எம்மால் விளங்கிக்கொள்ள முடியும்.

கிளின் ஸ்ரீலங்கா செயற்றிட்டம் மற்றும் அதன் எண்ணக்கரு சிறந்தது. சிங்கப்பூர் மற்றும் இந்தியா ஆகிய நாடுகளில் இந்தத் திட்டம் காணப்படுகின்றது. ஆகவே, சிறந்த திட்டங்களுக்க நாங்கள் என்றும் ஆதரவு வழங்குவோம்.

பெருந்தோட்ட மக்களையே நான் என்றும் பிரதிநிதித்துவப்படுத்துகின்றேன். எமது மக்கள் பல பிரச்சினைகளுக்கும், உரிமை மறுப்புக்கும் இன்றும் முகங்கொடுத்துள்ளார்கள்.

கடந்த நாடாளுமன்ற அமர்வின் போது பெருந்தோட்ட மக்களின் நாள் சம்பளம் 2000 ரூபாவாக அதிகரிக்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்டேன். இதற்கு ஆளும் தரப்பின் உறுப்பினர்கள் அவசரப்பட வேண்டாம் என்று குறிப்பிட்டுள்ளதை அவதானிக்க முடிந்தது.

2025 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தில் அரச சேவையாளர்களின் சம்பளத்தை அதிகரித்தால் பெருந்தோட்ட மக்களின் சம்பளத்தையும் அதிகரிக்க வேண்டும். ஏனெனில் எமது மக்கள் இன்றும் பல நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துள்ளார்கள்.” – என்றார்.

# யாழில் மாணவியை துஷ்பிரயோகம் செய்த ஆசிரியர் ஒருவர் கைது



யாழ்ப்பாணம், கோப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பாடசாலை ஒன்றில் 14 வயது மாணவியைத் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கிய குற்றச்சாட்டில் ஆசிரியர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பாடசாலையில் வைத்து மாணவியை 52 வயதான ஆசிரியர் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கினார் எனப் கோப்பாய் பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையில், ஆசிரியரை நேற்று கைது செய்துள்ள பொலிஸார், மாணவியை மருத்துவப் பரிசோதனைக்காக வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர்.

விசாரணைகளைத் தொடர்ந்து ஆசிரியரை யாழ். நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



# வவுனியாவில் கனமழை காரணமாகப் பாதிப்படைந்த 19 குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குமாறு உத்தரவு

(கி.வசந்தன்)

தொடர்ந்து பெய்து வரும் கனமழை காரணமாக வவுனியா மாவட்டத்தில் இடம்பெயர்ந்து தற்காலிக முகாமில் தங்கியுள்ள 19 குடும்பங்களைச் சேர்ந்த 67 பேருக்கு நிவாரணம் வழங்க உடனடி நடவடிக்கைகளை எடுக்குமாறு வவுனியா மாவட்ட செயலாளர் பீ.ஏ.சரத்சந்திர, அதிகாரிகளுக்கு இன்று அறிவுறுத்தியுள்ளார்.

செட்டிகுளம் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பீடியா பண்ணை கிராமம் வவுனியாவிலிருந்து சுமார் நாற்பது கிலோமீற்றர் தொலைவில் மிகவும் கடினமான சூழலில் அமைந்துள்ள கிராமமாகும்.

செட்டிகுளம் – மன்னார் பிரதான சாலையிலிருந்து ஆறு கிலோமீற்றர் தொலைவில் காட்டுப் பாதையில் அமைந்துள்ள இந்தக் கிராமத்தில் பாதுகாப்பான மையத்தை அமைக்கக் கூட ஒரு நிரந்தரக் கட்டடம் இல்லை.


மிகவும் கடினமான வாழ்க்கையை வாழ்ந்து வந்த இந்தக் குடும்பங்கள் வெள்ளத்தால் இடம்பெயர்ந்தனர். உழவு இயந்திரம் மற்றும் பாரவூர்தி களை பயன்படுத்தி அதற்குள் தங்கி யிருக்கின்றனர்.

குறித்த பிரதேசத்துக்கு நேரில் சென்று பார்வையிட்ட மாவட்ட அரச அதிபர், இந்த மக்களுக்குச் சமைத்த உணவு மற்றும் தங்குமிடத்தை வழங்க உடனடி நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.








EVEREST
FURNITURE
HIGH QUALITY PRODUCTS
(416) 332-0721
everestfurniture.ca
EverestFurnitureInc
80 FINCHDENE SQ M1X 1C1 SCARBOROUGH, CANADA

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## விலாங்கு மீன் இராஜதந்திரம்

ஒரு காலத்தில் வல்லாதிக்க உபகண்டமான இந்தியா, இலங்கையில் தமிழ்ப் போராளிகள் குழுக்களை தனக்குச் சாதகமான முறையில் பயன்படுத்திக் கொண்டு, கொழும்புக்கு பெரியண்ணன் போல மேலாதிக்க அழுத்தத்தைக் கொடுத்துக் கொண்டிருந்தது.

எண்பதுகளில் உருவெடுத்த இந்த மேலாண்மை போக்குடைய இந்திய ராஜதந்திரம் தோற்றுப் போய்விட்டது. இப்போது கொழும்பு சமதையாக நின்று புதுடில்லியுடன் ஊடாடுகின்றது.

இந்தப் பிராந்தியத்தின் வல்லாதிக்க சக்திகளான இந்தியாவையும், சீனாவையும் ஒவ்வொரு பக்கத்தில் நிறுத்திக் கொண்டு, பாம்புக்கு வாலும் மீனுக்குத் தலையும் காட்டும் விலாங்குமீன் ராஜதந்திரத்தை வெற்றிகரமாக முன்னெடுக்கின்றது கொழும்பு என்றால் அது மிகையல்ல.

இப்போது சீனாவுக்கு விஜயம் செய்த இலங்கை ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் பயணத்தை அடுத்து அம்பாந்தோட்டையில் சீன முதலீட்டுத் திட்டத்தின் கீழ் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை அமைப்பதற்காக சீனாவின் சினோபெக் நிறுவனத்துடன் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ள நிலையில், திருகோணமலையிலும் அவ்வாறானதொரு வசதியை இந்தியாவின் உதவியுடன் ஏற்படுத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் நேற்றுத் தெரிவித்திருக்கின்றார்.

உலகின் முன்னணி பெற்றோலியம் மற்றும் பெட்ரோ கெமிக்கல் நிறுவனமான சினோபெக் நிறுவனத்துடன் 3.7 பில்லியன் அமெரிக்க டொலர் முதலீட்டுக்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

இது எண்ணெய் சுத்திகரிப்பு திட்டமாக, ஏற்றுமதிச் சந்தையை முதன்மையாகக் கருதி முன்னெடுக்கப்படும் என்றும், அதற்காக அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை அண்டி 500 ஏக்கர் நிலப் பரப்பு ஒதுக்கப்படும் என்றும் இலங்கைத் தரப்பில் கூறப்படுகின்றது.

ஏற்கனவே இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உத்தேச பெட்ரோலியக் குழாய்த்திட்டம் குறித்துக் கலந்துரையாடுவதற்கு இரு தரப்பினரும் இணங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அப்படி இருக்கையில், கிழக்கு இலங்கையில் - திருகோணமலையில் - எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைக்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகவும், அத்தகைய ஒத்துழைப்புக்கு இந்தியா தயாராக இருந்தால் அதைச் செய்யலாம் என்றும் அமைச்சர் விஜித ஹேரத் கூறினார்.

ஏற்கனவே, இலங்கை ஜனாதிபதியின் கடந்த மாத புதுடில்லி விஜயத்தின் பின்னர் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட கூட்டறிக்கையில், பிராந்திய ஆற்றல் மற்றும் தொழில்துறை மையமாக திருகோணமலை எண்ணெய்க் குதங்களை அபிவிருத்தி செய்ய திட்டமிடப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்த திட்டத்தில் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் பங்கு வகிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது எனவும் கூட்டறிக்கையில் கூறப்பட்டது.

‘லங்கா இந்தியன் ஒயில் கம்பனி’ மற்றும் ‘இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்’ ஆகியவற்றின் கூட்டு முயற்சியான ‘றிங்கோ பெற்றோலியம் டெர்மினல் லிமிட்டெட்’ மூலம் திருகோணமலை எண்ணெய் தாங்கி பண்ணையை அபிவிருத்தி செய்ய அரசாங்கம் ஏற்கனவே தீர்மானித்துள்ளது.

திருகோணமலையில் இந்தியாவுக்கு வழங்கும் அதே புரிந்துணர்வு இணக்கப்பாட்டை, அதற்கு சமதையாக அம்பாந்தோட்டையில் சீனாவுடனும் முன்னெடுத்து, இந்தியா - சீனா ஆகிய இரு தரப்புகளுக்கும் வாலையும், தலையையும் காட்டும் தனது விலாங்குமீன் ராஜதந்திரத்தை கொழும்பு கனகச்சிதமாக நகர்த்துகின்றது என்பதுதான் இதில் அவதானிக்கப்பட வேண்டிய விடயமாகும்.

# வெள்ள நீரில் மூழ்கிய விவசாய நிலங்கள்

## விவசாயிகள் அங்கலாய்ப்பு





(சம்மாந்துறை தில்சாத் பர்வீஸ் )

சம்மாந்துறை பிரதேச செயலாளர் எல்லைக்கு உட்பட்ட நைனாகாடு சாவாற்றின் (பனையடிஇறக்கம்) விவசாய நிலங்கள் வெள்ளத்தில் மூழ் கியுள்ளன.

இவற்றுள் சாவாறு ஆஸ்பத்திரி பாம் முழுமையாக பாதிக்கப்பட்டு காணப்படுகிறது. அதுமட்டுமின்றி வடசேலியா விவசாய நிலம் பகுதியளவு பாதிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக விவசாயிகள் கருத்து தெரிவிக்கும் போது, கடந்த வெள்ள அனர்த்தத்தால் சாவாறு பனையடி இறக்கம் உடைந்த நிலையில் காணப்பட்டது. அதனை உரியமுறையில் சீரமைக்கப்படாமையால் இம்முறையும் பெரிய பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இதற்கு முழுப் பொறுப்பும் உரிய அதிகாரிகளே ஏற்க வேண்டும். அதுமட்டுமின்றி இவர்களுக்கு எதிராக நாங்கள் ஆர்ப்பாட்டம் செய்ய இருக்கிறோம்.- எனத் தெரிவித்துள்ளனர்.

# உணவில் கரப்பான் பூச்சி; பொலிஸார் நடவடிக்கை!

(தலவாக்கலை பி.கேதீஸ்)

சாப்பிட்ட உணவில் கரப்பான் பூச்சி காணப்பட்ட நிலையில் ஹோட்டல் உரிமையாளருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று ஹட்டன் நகர சபை பொது சுகாதார பரிசோதகர் எஸ். சௌந்தர்ராகவன் தெரிவித்துள்ளார்.

ஹட்டன் நகரில் நேற்று முன்தினம் (21) பிரபல ஹோட்டல் ஒன்றில் இருவர் பகல் உணவு சாப்பிட்டபோது, உணவில் கரப்பான் பூச்சி இருந்துள்ளது.

இதன்காரணமாக ஹோட்டல் உரிமையாளருடன் குறித்த இருவருக்கும் முரண்பாடு ஏற்பட்ட நிலையில் 119 இற்கு அழைப்பு விடுக்கப்பட்டதை அடுத்து,





ஹட்டன் பொலிஸார் சம்பவ இடத்துக்கு சென்று விசாரணைகளை முன்னெடுத்தனர்.ஹட்டன் நகரசபை பொது சுகாதார பரிசோதகர் எஸ்.சௌந்தரராகவனிடமும் முறைப்பாடு செய்யப்பட்டது.

சம்பவ இடத்துக்குச் சென்ற நகர சபைப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர், பரிசோதனையின் பின்னர் ஹோட்டல் உரிமையாளருக்கு எதிராக ஹட்டன் நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப் பொலிஸார் ஊடாக நடவடிக்கை எடுத்துள்ளார்.

# யாழ்ப்பாண சர்வதேச வர்த்தகக் கண்காட்சி நாளை வெள்ளிக்கிழமை ஆரம்பமாகிறது!

(எஸ். நிதர்ஷன்)

யாழ்ப்பாண சர்வதேச வர்த்தக கண்காட்சி நாளை வெள்ளிக்கிழமை முதல் 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை இடம்பெறவுள்ளது என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் தனியார் விடுதி ஒன்றில் நேற்று புதன்கிழமை வர்த்தகக் கைத்தொழில் துறை மன்றத்தில் ஏற்பாட்டில் நடைபெற ஊடக சந்திப்பின் போதே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

15ஆவது வருடமாக நடைபெறும் இந்தக் கண்காட்சி தொடர்ந்து மூன்று தினங்கள் யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

'வடக்குக்கான உங்கள் நுழைவாசல்'



என்ற தொனிப்பொருளில் நடைபெறும் இந்த நிகழ்வு, இலங்கை மற்றும் வெளிநாடுகளில் உள்ள தொழில் முயற்சியாளர்கள், வர்த்தக வல்லுனர்கள் மற்றும் சமூக உறுப்பினர்களை ஒன்றிணைத்து பொருளாதார நிகழ்வாக நடைபெறவுள்ளது.

குறிப்பாகப் பிராந்தியத்தின் பொருளாதார ஆற்றல் மற்றும் செழிப்பான தொழில்துறை என்பன விரிவாகக் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

300 இற்கும் மேற்பட்ட விற்பனைக் காட்சிக் கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அதில் நிர்மாணத்துறை, சுற்றுலாத்துறை, தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பவியல், கல்வி, வாகனம், விவசாயம், ஆடை உற்பத்தி உள்ளிட்ட பல்வேறு துறைகளின் காட்சிக் கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

கண்காட்சியில் கழிவு முகாமைத்துவ நிலையங்களை நிறுவப்பட்டுள்ளன. கண்காட்சி நடைபெறவுள்ள தினங்களில் பிளாஸ்ரிக் கழிவுகளை ஒப்படைத்து பசுமையான சுற்றுச்சூழலை உருவாக்க பங்களிப்பு செய்யும்படி கோருகிறோம் என்று ஏற்பாட்டாளர்களான வர்த்தகக் கைத்தொழில் துறை மன்றத்தினர் மேலும் தெரிவித்துள்ளனர்.





# ‘கிளீன் ஸ்ரீலங்கா’ வேலைத்திட்டம் துப்புரவு செய்யப்பட்ட கடற்கரைகள்!

(பாறுக் ஷிஹான்)

செழுமையான தேசம் அழகான வாழ்வு” என்ற தூர நோக்கை அடையும் விதத்தில் ‘கிளீன் ஸ்ரீலங்கா’ செயற்றிட்டத்தின் கீழ் கல்முனை பிராந்தியத்தில் கடற்கரை பிரதேசங்களைச் சுத்தம் செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன் அடிப்படையில் கல்முனை கடற்கரை பிரதேசத்தை சுற்றியுள்ள கடற்கரைப் பகுதிகளைக் கல்முனை தலைமையக பொலிஸ் நிலையத்தினருடன் இணைந்து கல்முனை பெரிய முகைதீன் ஜும்மா பள்ளிவாசல் நிர்வகத்தினர், கடற்கரை நாகூர் ஆண்டனை தர்ஹா பள்ளிவாசல் நிர்வாகம், கல்முனை விசேட அதிரடிப்படை, இராணுவம், பிரதேச செயலகம், கல்முனை பிராந்திய பொதுச் சுகாதாரப் பிரிவு ஆகியன இழந்து இந்தப் பணிகளை மேற்கொண்டன.

நிகழ்வில் கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ரம்சீன் பக்கீர் ஆலோசனையில் கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரியும் கல்முனை குற்றப்புலனாய்வு பிரிவின் பிரதம பொலிஸ் பரிசோதகருமான அலியார் றபீக் சுற்றுச் சூழல் பிரிவு பொறுப்பதிகாரியும் பிரதம பொலிஸ் பரிசோதகருமான சிவநாதன் சமூக பொலிஸ் பிரிவு பொறுப்பதிகாரியும் பிரதம பொலிஸ் பரிசோதகருமான வாஹிட், மோட்டார் போக்குவரத்து பிரிவு பொறுப்பதிகாரியும் பிரதம பொலிஸ் பரிசோதகருமான பி.ரி நஸீர் ஆகியோர் கலந்து கொண்டனர்.







### பத்து வருடங்களாகப் பயன்பாடற்று இருந்த

# விசுவமடு விவசாயிகள் கூட்டுறவு சங்க நெல் உலர்த்தி மீண்டும் பாவனைக்கு!

கடந்த 2016 காலப் பகுதியில் சர்வதேச தனியார் நிறுவனத்தால் விசுவமடு விவசாயிகள் கூட்டுறவு சங்கத்துக்கு நன்கொடையாக வழங்கபட்ட நெல் உலர்தியுடன் கூடிய அரைக்கும் ஆலை நீண்ட காலமாக விவசாயிகளுக்கு பயனற்ற விதத்தில் இருந்தது .

இந்த விடயம் வடக்கு கூட்டுறவு அபிவிருத்தி வங்கியின் தலைவரது கவனத்துக்குக் கொண்டுவரப்பட்ட நிலையில் வங்கியின் தலைவர் அகிலன் கதிர்காமரின் வழிகாட்டலில் வடக்கு கூட்டுறவு அபிவிருத்தி வங்கியினர், இலாபநோக்கற்ற எந்திரிகள் அமைப்பினர், கோபி பொறியியலாளரகள் கட்டமைப்பினர் ஆகியோர் ஒன்றிணைந்து இந்த நெல் உலர்த்தியை மீள இயங்கு நிலைக்கு கொண்டுவந்துள்ளனர்.

இந்த நெல் உலர்த்தி மூலம் நாளொன்றுக்கு 32000 கிலோ ஈர நெல்லை 15-20 மணித்தியாலங்களில் உலர்த்த முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. வடக்கில் சீரற்ற கால நிலையால் விவசாயிகள் நெல்லை உலர விடுவதில் பாரிய இன்னல்களை எதிர் நோக்கிறார்கள் இவ் உலர்தியை பயன்படுத்தி அதிகபட்சம் 40 வீதம் ஈரமான நெல்லை கூடவும் உலரவிட முடியும் தெரிவிக்கப்பட்டுள்ளது.





# வவுனியாவில் உதவித் திட்டங்கள் வழங்கிய சந்நிதியான் ஆச்சிரமம்

தொண்டைமானாறு, சந்நிதியான் ஆச்சிரமத்தால் வவுனியாப் பிரதேசத்தில் இரு குடும்பங்களுக்கு மருத்துவத்துக்கான உதவித் திட்டமாக ஒரு தொகை நிதி வழங்கப்பட்டது.

அங்குள்ள அறநெறிப் பாடசாலை தொடர்பாக கள ஆய்வும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வவுனியா - கனகராஜன்குளம், பெரியகுளம் பிரதேசத்தை சார்ந்த இரு சிறுநீரகங்களும் பாதிக்கப்பட்ட குடும்பத்துக்கு மருத்துவச் செலவுக்காக 40 ஆயிரம் ரூபா நிதியும் கனகராஜன்குளம், பெரியகுளம் பிரதேசத்தைச் சேர்ந்த விசேட தேவைக்கு உட் பட்ட குடும்பம் ஒன்றுக்கு மருத்துவச் செலவுக்காக 30 ஆயிரம் ரூபாவும் சந்நிதியான் ஆச்சிரமப் பொறுப்பாளர் அமுதகலாசுரபி கலாநிதி செ. மோகனதாஸ் சுவாமிகளால் வழங்கி வைக்கப்பட்டன.

அத்துடன் வவுனியா - வடகாடு, பிரமணாலங்குளம் ஸ்ரீ



முத்துமாரி அம்மன் அறநெறிப் பாடசாலைக்கான புதிய கட்டடம் தொடர்பான கோரிக்கைக்கு அமைவாக,நேரடியாகச் சென்று களஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அப்பாடசாலைக்குக் கட்டடம் அமைத்துக் கொடுக்கத் தீர்மானிக்கப்பட்டது. அத்துடன் அந்த மாணவர்களுக்கு சத்துணவுக்கு மாதாந்தம் 10 ஆயிரம் ரூபா நிதி வழங்குவதாகவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தெரிவித்தார்.




# மூதூர் பொலிஸ் பிரிவு பகுதியில் வாய்க்காலுக்குள் பாய்ந்த ‘கெப்’

**(எஸ்.கீதபொன்கலன்)**

மூதூர் பொலிஸ் பிரிவின் இருதயபுரம் (பச்சநூர்) பகுதியில் உள்ள வாய்க்காலுக்குள் புரண்டு விழுந்து சிறிய ரக ‘கெப்’ வாகனம் விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று புதன்கிழமை (22) இடம் பெற்றுள்ளது. விபத்து சம்பவத்தில் வாகனத்தில் பயணித்தோர் சிறிய காயங்களுடன் உயிர் தப்பியுள்ளனர்.

மட்டக்களப்பில் இருந்து திருகோணமலை நோக்கி பயணித்த கெப் ரக வாகனமே இந்த விபத்தை எதிர்நோக்கியுள்ளது.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை மூதூர் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.









# யாழ். முஸ்லிம் சமூக ஜோதி விருதுக்கு ஐந்து பேர் தெரிவு

யாழ். முஸ்லிம் சமூக ஜோதி விருது -2024 இற்கு 5 பேர் தெரிவு செய்யப்பட் டுள்ளனர்.

யாழ். முஸ்லிம் சமூக ஜோதி விருது -2024 இற்கு எஸ்.எம்.மீரான் ஸாஹிப் பௌண்டேஷன் சார்பில் எம்.எஸ்.ஜாபிர் அனுசரணை வழங்குகிறார்.

யாழ். முஸ்லிம் சமூக ஊடக நிர்வாகி கலாபூஷணம் பரீட் இக்பாலின் ஏற்பாட்டில் வழங்கவிருக்கும் “யாழ். முஸ்லிம் சமூக ஜோதி” விருது 2024 இற்கு, சமூகப்பற்றுள்ள கல்வியியலாளரும் முதலாவது யாழ். முஸ்லிம் வணிக பட்டதாரியுமான எம்.ஏ.சி. அப்துல் ஸலாம், சமூகப்பற்றுள்ள கல்வியியலாளர் மஹற்றூப் ஏ.காதர், முன்னாள் யாழ். மத்திய கல்லூரி சிறந்த கிரிக்கெட் வீரர் அபூபக்கர் சுல்தான், கவிஞர் யாழ். அஸீம், முன்னாள் யாழ். முஸ்லிம் விளையாட்டுக் கழக உதைபந்தாட்ட நட்சத்திர கோல் கீப்பர் எம்.எம். முனாஸ் ஆகியோர் தெரிவு செய்யப்பட் டுள்ளனர்.







# யாழ். கலாசார மண்டபத்தில் இடம்பெற்ற ‘கலாரசனா’வின் ‘சங்கமம்’ நிகழ்வுகள்

புலம்பெயர் நாடுகளிலும் இலங்கையிலும் எமது இளம் தலைமுறையினரின் கலைத் திறன்களை ஒரே மேடையில் சங்கமிக்கவைத்து, எதிர்கால சந்ததியினர் தம்மிடையே ஓர் அந்நியோன்யத்தை தொடர்வதை நோக்காகக் கொண்டு லண்டனின் ‘கலாரசனா’ அமைப்பு யாழ். கலாசார மண்டபத்தில் ஆண்டு தோறும் இரு இசை, நடன நிகழ்வுகளை நடத்தி வருகின்றது.



கடந்த ஆண்டு ஓகஸ்டில் நடைபெற்ற இதன் முதலாவது நிகழ்வைத் தொடர்ந்து அதன் இரண்டாவது நிகழ்வு கடந்த 17, 18 ஆம் திகதிகளில் நடைபெற்றது.

முதல் நாள் சிறப்பு இசையரங்காக, இந்தியாவில் இருந்து வந்த பிரபல திரை இசைப் பின்னணி பாடகரும் கர்நாடக இசைக் கலைஞருமான பாலக்காடு ஸ்ரீராமின் இசைக் கச்சேரி நடைபெற்றது.

இந்தியாவிலிருந்து வந்த பக்கவாத்திய கலைஞர்கள் பக்கல ராமதாஸ் (வயலின்), ஏ. எஸ். ரங்கநாதன் (மிருதங்கம்) ஆகியோருடன் இலங்கைக் கலைஞரான சிவசுந்தரசர்மாவும் (கெஞ்சிரா) கலந்துகொண்டார்.

இரண்டாம் நாள் இரு நடன நிகழ்ச்சிகள் நடைபெற்றன. அமெரிக்காவிலிருந்து வந்த பரதநாட்டிய கலைஞர் கலைமகள் சந்திரசேகரம் ‘சங்கமும் சுனாமியும்’ என்று, சங்க இலக்கிய பாடல்கள் சிலவற்றை தற்போதைய காலத்துடனும் தொடர்புபடுத்தி, சிறந்த உரை விளக்கமும் சேர அளித்த நடன நிகழ்வு சிறப்பாக இருந்தது.

அதைத் தொடர்ந்து கொழும்பு தியாகராஜர் கலைக்கோவில் அளித்த ‘மனம் சுமந்த வலிகள்’ நாட்டிய நாடகம், ஈழத் தமிழரின் வரலாறும், வாழ்வும், அவர்களின் அண்மைக்கால அவலங்களும் போன்ற விடயத்தை யதார்த்தமாய் வெளிப்படுத்தியது. நம்மைப் பற்றிய நினைவுகளை மீட்டியது.

நடன ஆசிரியை திருமதி பவானி குகப்பிரியா நெறிப்படுத்தியிருந்த இந்த நாட்டிய நாடகத்தில் முப்பது பேர்வரை பங்குபற்றியிருந்தனர்.

தென்கயிலை ஆதீன முதல்வர் அகத்தியர் அடிகளார் பாடல் வரிகளை ஆக்கியிருந்தார். ‘கலா ரசனா’வின் இந்த ‘சங்கமம்’ நிகழ்வின் இரண்டு நாள் நிகழ்வும் அரிதான ஒரு வாய்ப்பாக இருந்தது. அடுத்த சங்கமம் நிகழ்வு எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் நடைபெறவுள்ளது என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

முதல் நாள் நிகழ்வில் வட மாகாண பிரதம செயலாளர் எல். இளங்கோவன், வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் பற்றிக் டிரஞ்சன் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர். இரண்டாம் நாள் நிகழ்வில் வடமாகாண ஆளுநர் நா. வேதநாயகன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.











# யாழ். பல்கலைக்கழக கலைப்பீடத்தின் இளங்கலை மாணவர் ஆய்வு மாநாடு!

(எஸ். நிதர்ஷன்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடத்தின் நான்காவது இளங்கலை மாணவர் ஆய்வு மாநாடு நேற்று புதன்கிழமை இடம்பெற்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பொன்விழா ஆண்டின் தொடர் நிகழ்வுகளில் ஒன்றாகவும், பல்கலைக்கழக சர்வதேச மாநாட்டுத் தொடரின் ஓர் அம்சமாகவும் இந்த இளங்கலை மாணவர் ஆய்வு மாநாடு நடைபெறுவது வழமை.

மாநாட்டின் அழைப்பாளர் சிரேஷ்ட விரிவுரையாளர் எஸ். நிரோஷன் தலைமையில் கைலாசபதி கலையரங்கில் நடைபெற்ற ஆரம்ப நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா கலந்துகொண்டார்.



மாநாட்டின் தலைமையாளராகக் கலைப் பீடாதிபதி பேராசிரியர் சி. ரகுராம் கலந்து கொண்டார்.

சிறப்புரையாளராக இலங்கை மத்திய வங்கியின் கண்காணிப்புப் பிரிவு சிரேஷ்ட உதவிப் பணிப்பாளர் பால கிருஷ்ணன் சிவதீபன், கலந்து கொண்டனர்.

இந்த மாநாட்டில் 132 ஆய்வுக் கட்டுரைகள் பட்டப்படிப்பை நிறைவு செய்து வெளியேறும் மாணவர்களால் சமர்ப்பிக்கப்பட்டன.

“மனிதாயக் கற்கைகளிலும் சமூக விஞ்ஞானத்திலும் எழுந்துவரும் போக்குகளும் எதிர்கால திசைகாட்டலும்” என்னும் கருப்பொருளில் நடைபெறும் இந்த ஆய்வு மாநாடு, மாணவர்கள் தமது இறுதிவருட ஆய்வுச் செயற்பாட்டின் பேறான ஆய்வேடுகளை அடிப்படையாகக் கொண்டு தயாரித்த ஆய்வுக் கட்டுரைகளை வெளிக்கொண்டுவரும் முயற்சியாக அமைந்துள்ளது.



# மேன்காமம் கிராம அபிவிருத்திச் சங்க கட்டடம் பொலிஸாரால் விடுவிக்கப்பட்டது

(எஸ்.கீதபொன்கலன்)

மூதூர் - மேன்காமம் பொலிஸ் நிலையத்துக்காகப் பயன்படுத்தப்பட்டு வந்த மேன்காமம் கிராம அபிவிருத்திச் சங்க கட்டடம் பல வருடங்களுக்குப் பின்னர் நேற்று (22) பொலிசாரால் மக்களின் பாவனைக்காக கையளிக்கப்பட்டது.

சுமார் 15 வருடங்களாக இந்தக் கட்டடத்தில் எவ்வித கொடுப்பனவுகளும் இன்றி மேன்காமம் பொலிஸ் நிலையம் இயங்கி வந்தது.

இது தொடர்பாக கடந்த 17 ஆம் திகதி இடம்பெற்ற மூதூர் பிரதேச ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசனால் குறித்த கட்டடத்தை மக்களின் பாவனைக்கு வழங்குமாறு கோரிக்கை முன்வைக்கப்பட்டிருந்தது.

மேன்காமம் கிராம மக்களின் தேவைக்காக மூதூர் பிரதேச செயலகத்தால் ஒரு வரவேற்பு அறையும், நான்கு படுக்கை அறைகளையும் கொண்ட கட்டடம் வழங்கப்பட்டிருந்தது. குறித்த கட்டடமானது தாய்-சேய் பராமரிப்பு நிலையம், நூலகம் உட்பட மற்றும் ஏனைய பல தேவைகளுக்கென சுமார் 15 வருடங்களுக்கு முன்னர் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது.

எனினும் அவசரமாக பொலிஸ் நிலையத்துக்குக் கட்டடம் தேவைப்பட்டதால் அந்தக் கட்டடம் அப்போது பொலிஸ் நிலையத்தின் பாவனைக்காக வழங்கப்பட்டிருந்தது. அதில் மூன்று பொலிஸ் உத்தியோகத்தர்கள் வசித்து வந்தனர் இதனால் மக்கள் தங்களது தேவைகளுக்காக பொதுக் கட்டடமின்றி சிரமப்பட்டு வந்தார்கள்.

இந்த நிலையில் இந்தக் கட்டடத்தை மீள வழங்கக்கோரி கடந்த 2020 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் மக்கள் கடிதம் மூலமாக கோரிக்கை விடுத்திருந்தும் பயனளித்திருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.




## வெள்ளக்காடாகியது கிழக்கு:

# வான்கதவுகள் திறக்கப்பட்டன; மக்களுக்கு எச்சரிக்கை விடுப்பு!

(காரைதீவு சகா)

கிழக்கு மாகாணத்தில் இன்று வியாழக்கிழமை பரவலாக வெயில் எறித்தது. எனினும் நேற்று கனமழை பொழிந்தது.

கிழக்கு மாகாணத்தில் தொடர்ச்சியாக நிலவி வரும் சீரற்ற காலநிலை காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

கடந்த சில தினங்களாக பெய்து வந்த பலத்த மழை இம்மாகாணத்தில் சற்று குறைவடைந்திருந்த போதிலும், நேற்று அதிகாலை முதல் மீண்டும் மழை பெய்யத் தொடங்கியது. சீரற்ற காலநிலை காரணமாக கிழக்கு மாகாணத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். ஆயிரக்கணக்கானோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அம்பாறை மாவட்டத்தின் பிரதான நீர்த்தேக்கமான டி.எஸ்.சேனநாயக்க சமுத்திரம் 110 அடி கொள்ளளவு கொண்டதாகும். தற்போது 109.2 அடி நீர் நிரம்பியுள்ளதனால் செக்கனுக்கு 2,380 கன அடி நீர் வெளியேற்றப்பட்டு வருகிறது.

நேற்று நண்பகலுக்குப் பின்னர் இந்த நீர்த்தேக்கத்தில் சுமார் இரண்டரை அடி நீர் வெளியேற்றப்பட்டது என்று அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் அம்பாறை மாவட்ட பிரதிப் பணிப்பாளர் எம்.ஏ.சீ.எம்.றியாஸ் தெரிவித்தார்.

வான்கதவுகள் திறக்கப்பட்டதன் காரணமாக அம்பாறை மாவட்டத்தின் தாழ்நிலப் பிரதேசங்கள் நீரில் மூழ்கியுள்ளன. தாழ்நிலப் பகுதிகளில் வசிப்பவர்களை அவதானமாக இருக்குமாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்த மாவட்டத்தில் சுமார் மூவாயிரம் ஏக்கர் நெற்செய்கை பாதிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. ஒலுவில், வீரயடி விவசாயப் பிரிவில் சுமார் நான்காயிரம் ஏக்கர் நெற்காணிகளில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஏக்கர் விவசாயச் செய்கை முற்றாக நீரில் மூழ்கியுள்ளது என்று நீர்ப்பாசன திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த சில வாரங்களுக்கு முன்னர் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கின் மூலம் ஒலுவில் அஷ்ரஃப் நகர் பிரதான கொங்றீட் பாதை உடைப்பெடுத்தது. இவ்வாறு உடைப் பெடுத்த பாதைக்கு அருகில் தற்காலிகமாக கிறவல் பாதையொன்றும் அண்மையில் அமைக்கப்பட்டது. தற்காலிக பாதையும் தற்போது உடைப்பெடுத்து, முற்றாக நீரில் மூழ்கியுமுள்ளது. இதுதவிர, களியோடை ஆற்றின் அணைக்கட்டுப் பகுதி உடைப்பெடுத்துள்ளமையால் ஒலுவில் வீரயடிப் பிரிவு விவசாய நிலங்கள் நீரில் மூழ்கியுள்ளன.

ஒலுவில் வீரயடிப் பகுதியில் அமைந்துள்ள நீர்நிலையின் பிரதான 12 வான் கதவுகளும் திறக்கப்பட்டு களியோடை ஆற்றின் மூலம் அந்நீர் கடலுக்கு அனுப்பப்படுகின்றது. இதனால் களியோடை ஆற்றை அண்டிய விவசாயப் பயிர்கள் நீரில் மூழ்கியுள்ளன. அம்பாறை மாவட்டத்தின் சம்மாந்துறை, மகாஓயா மற்றும் தமண ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கிட்டங்கி தாம்போதியில் வெள்ளம் பாய்கிறது. இராணுவத்தினர், பொலிஸார், நாவிதன்வெளி பிரதேச செயலகத்தினர் மற்றும் பிரதேச சபை அனர்த்த முகாமைத்துவ குழுவினர் இந்தப் பகுதிப் போக்குவரத்தைக் கண்காணித்து வருகின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள 12 பிரதேச செயலகப் பிரிவுகளில் 3,737 குடும்பங்களைச் சேர்ந்த 11,971 பேர் பாதிக்கப்பட்டுள்ளதோடு, ஏறாவூர்ப்பற்று மற்றும் கோறளைப்பற்று ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று மட்டக்களப்பு மாவட்ட உதவிப் பணிப்பாளர் ஏ.எஸ்.எம்.சியாத் தெரிவித்தார்.

அறுவடைக்குத் தயாராக இருந்த ஆயிரக்கணக்கான ஏக்கர் நெற்செய்கை வெள்ளநீரில் மூழ்கியுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

வயல் நிலங்கள் கடல் போல காட்சி தருகின்றன. ஒரு லட்சத்து 90 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் இந்த மாவட்டத்தில் பெரும்போகை நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டது என்று மட்டக்களப்பு மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்கள பணிப்பாளர் எஸ். ஜெகநாதன் தெரிவித்தார்.

நவகிரிகுளம், புனாணை அனைக்கட்டு, வடமுனைக்குளம், வெலியாகண்டிய குளம், றூகம்குளம். வாகனேரி குளம், கட்டுமுறிவுக்குளம், போன்ற குளங்களின் வான்கதவுகளும் திறக்கப்பட்டுள்ளன.

திருகோணமலை மாவட்டத்தில் சேருவல, வெருகல் பிரதேச செயலகப் பிரிவுகளில் 51 குடும்பங்களைச் சேர்ந்த 144 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அனர்த்த முகாமைத்து மத்திய நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் கே. சுகணதாஸ் தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்டத்தில் சீரற்ற காலநிலை காரணமாக மகாவலி கங்கையின் திம்புலாகலை, ஈச்சிலம்பற்று. ஹிங்குராக்கொட, கந்தளாய், கிண்ணியா, கோரளைப்பற்று வடக்கு, லங்காபுர, மெதிரிகிரிய, மூதூர், சேருவில, தமங்கடுவ, தம்பலகாமம் மற்றும் வெலிகந்த ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு உட்பட்ட மகாவலி ஆற்றின் தாழ்வான பகுதிகளில் வசித்து வரும் மக்களை அவதானத்துடன் செயற்படுமாறு அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

கந்தளாய் நீர்த்தேக்கத்தின் வான்கதவுகளும் திறக்கப்பட்டுள்ளன.



# யாழ். பல்கலைக்கழக சட்டத் துறையின் சர்வதேச சட்ட ஆய்வு மாநாடு சனியன்று!

(எஸ். நிதர்ஷன்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகச் சட்டத்துறையின் ஏற்பாட்டில் வருடாந்தம் நடாத்தப்படும் யாழ்ப்பாண சர்வதேச சட்ட மாநாடு எதிர்வரும் 25 ஆம், 26 ஆம் திகதிகளில் யாழ். பல்கலைக் கழகத்தின் மருத்துவ பீட ஹூவர் கலையரங்கில் காலை 9 மணி முதல் மாலை வரை இடம்பெறவுள்ளது.

இது தொடர்பில் ஊடகவியலாளர் சந்திப்பு இன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் இடம்பெற்றது.

இந்த ஊடக விவரிப்பில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கலைப் பீடாதிபதி பேராசிரியர் சி.ரகுராம், சுரானா மற்றும் சுரானா சர்வதேச வழக்கறிஞர் நிறுவனத்தைச் சேர்ந்த சஞ்சை சர்மா கிஷான் லால், சட்டத்துறை விரிவுரையாளர் திருமதி சுபாசினி ருமணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது, சட்டத்துறைத் தலைவர் திருமதி கோசலை மதன் யாழ்ப்பாண சர்வதேச சட்ட மாநாடு பற்றி விளக்கமளித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகச் சட்டத்துறை, இந்தியாவின் புகழ் பூத்த சுரானா மற்றும் சுரானா சர்வதேச வழக்கறிஞர் நிறுவனத்துடன் இணைந்து இரண்டாவது தடவையாகவும் 'முறை செய்' என்ற தலைப்பில் யாழ்ப்பாண சர்வதேச சட்ட மாநாட்டை நடத்துவதற்குத் தீர்மானித்துள்ளது.

மாற்றத்துக்கான கருவியாக சட்டம் என்னும் சாரப்பட செயற்படல், நிலைமாற்றம், நிலைத்திருப்பு என்னும் தொனிப்பொருளில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இவ்வருட மாநாட்டின் முதல் நாள் நிகழ்வில் இலங்கை உயர்நீதிமன்ற நீதியரசர் ப்ரீத்தி பத்மன் சூரசேன பிரதம விருந்தினராகவும், தகவல் உரிமை ஆணைக்குழுவின் ஆணையாளர்களில் ஒருவரான ஹிஷாலீ பின்டோ ஜெயவர்த்தன சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

முதல் நாள் நிகழ்வில் ஆளுகை நிலைமாற்றம் தொடர்பில் சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழக உதவிப் பேராசிரியர் டியான் ஷாவும், இலத்திரனியல் நிலைமாற்றம் தொடர்பாக சிரேஷ்ட சட்டத்தரணி கலாநிதி சுனில் அபேரட்னவும் சிறப்புரைகளை ஆற்றவுள்ளனர்.

முதல் நாள் நிகழ்வின் மற்றுமொரு சிறப்பம்சமாக 'மக்களின் அரசியலமைப்பு, அதன் எதிர்காலம்' என்னும் தலைப்பிலான சிறப்புக்கலந்துரையாடல் ஒன்றும் இடம்பெறவுள்ளது. அந்தக் கலந்துரையாடலில் கொழும்புப் பல்கலைக்கழக சட்ட பீட முன்னாள் பேராசிரியர் வீ.த.தமிழ்மாறன், ஜனாதிபதி சட்டத்தரணி ஜெயந்தா டி அல்மெய்டா குணரட்ண, பேராதனைப் பல்கலைக் கழக சட்டத்துறைத் தலைவர் கலாநிதி கலன சேனாரட்ண ஆகியோர் உரையாளர்களாகவும் மாற்றுக் கொள்கை நிலையத்தின் சிரேஷ்ட ஆய்வாளர் பவானி பொன் சேகா உரையாளர் மற்றும் நெறியாளராகவும் பங்கு கொள்ளவுள்ளனர்.

இரண்டாம் நாள் நிகழ்வில் இலங்கை உயர்நீதிமன்ற நீதியரசர் ஜனக் டீ சில்வா பிரதம விருந்தினராகவும், இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சட்ட நிலையியல் குழுவின் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி சமந்தா உனம்பூவே சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வுள்ளனர்.

கலாசார நிலைமாற்றம் தொடர்பாக சமத்துவத்துக்கும் நீதிக்குமான நிலையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஷாமலா கோமஸ், முறையியல் நிலைமாற்றம் தொடர்பில் கொழும்புப் பல்கலைக்கழக சட்ட பீடத்தின் முன்னாள் பீடாதிபதி பேராசிரியர் நாகநாதன் செல்வக்குமரன் ஆகியோர் சிறப்பு ரைகளை ஆற்றவுள்ளனர்.

'நிலைமாற்றம், சவால்களும் வாய்ப்புக்களும்' என்னும் தொனிப் பொருளிலான விசேட கலந்துரையாடல் ஒன்றும் இடம்பெறவுள்ளது.

கொழும்புப் பல்கலைக்கழக சட்ட பீடத்தின் முன்னாள் பேராசிரியர் வீ.த. தமிழ்மாறன் , கொழும்புப் பல்கலைக் கழக வரலாற்றுத்துறைப் பேராசிரியர் நிர்மால் ரஞ்சித் தேவசிறி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பொருளியல் துறை மூத்த விரிவுரையாளர் கலாநிதி முத்துக்கிருஷ்ணா சர்வானந்தன், சட்டத்தரணி சந்துணி ஆகியோர் வளவாளர்களாகவும், யாழ்ப்பாணப் பல்கலைக் கழக ஆங்கிலத்துறை மூத்த விரிவுரையாளர் கலாநிதி மகேந்திரன் திருவரங்கன் நெறியாளராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இலங்கை மற்றும் வெளிநாட்டு ஆய்வாளர்களால் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுச் சுருக்கங்கள், பொருளாதார வளர்ச்சியும் முதலீடும், சுற்றுச்சூழல் சவால்கள், உரிமைகள், நீதி, குடும்பச் சட்டமும் பாரபட்சமும், செயற்கை நுண்ணறிவும் தொழிநுட்பமும், புதிய எண்ணக்கருக்கள் என்னும் 7 தலைப்புக்களின் கீழ் ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்படவுள்ளன.

இவ்வருட மாநாட்டின் புதிய முயற்சியாக யாழ் பல்கலைக்கழக சட்டத்துறை மாணவர்கள் சிலர் முறையான ஆய்வு மேற்பார்வைக்கு உட்பட்ட தமது ஆய்வுக் கட்டுரைகளை முதல் நாள் மாலை அமர்வில் சமர்ப்பிக்கப்படவுள்ளனர்.

மாநாட்டின் மற்றொரு அங்கமாக மாற்றுப் பிணக்குத் தீர்வு முறைகள் பற்றிய குறிப்பாக மத்தியஸ்தம் தொடர்பான சிறப்பு அமர்வு ஒன்றும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இந்த நிகழ்வானது 24 ஆம் திகதி பிற்பகல் 4 .30 மணி முதல் 6.30 மணி வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.






# தீப்பரவல் அச்சம் காரணமாக ரயிலிலிருந்து குதித்த பயணிகள்

## மகாராஷ்டிராவில் 12 பேர் உயிரிழப்பு

மகாராஷ்டிராவின் ஜல்கான் மாவட்டத்தில் நேற்று மாலை ரயிலில் மோதி குறைந்தது 12 பேர் உயிரிழந்தனர்.

இந்த சம்பவத்தில் சுமார் 7 பேர் காயமடைந்துள்ளனர் என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ரயிலில் ஏற்பட்ட சந்தேகத்திற்கிடமான தீவிபத்தால் பதற்றமடைந்த புஷ்பக் எக்ஸ்பிரஸ் பயணிகள், ரயிலில் இருந்து கீழே இறங்கியுள்ளனர்.

இதன்போது, அடுத்துள்ள தண்டவாளத்தில் எதிர்திசையில் இருந்து வந்த கர்நாடகா எக்ஸ்பிரஸ் பயணிகள் மீது மோதியமையினால் இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

லக்னோவில் இருந்து மும்பைக்கு செல்லும் புஷ்பக் எக்ஸ்பிரஸ், ஜல்கான் அருகே இருந்தபோது, அதன் பெட்டிகளில் ஒன்றில் தீப்பிடித்ததாக வதந்தி பரவியது பயணிகளிடையே பீதியை ஏற்படுத்தியதாகக் கூறப்படுகிறது.

விபத்து நடந்த இடத்திற்கு 8 நோயாளர் காவுவண்டிகள் அனுப்பப்பட்டன எனவும் சம்பவத்தில் காயமடைந்தவர்கள் அருகிலுள்ள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர் என்றும் மகாராஷ்டிர முதல்வர் தேவேந்திர ஃபட்னாவிஸ் தெரிவித்துள்ளார்.

மேலும், ரயில் விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா 5 லட்சம் இந்திய ரூபா இழப்பீடு வழங்கப்படும் என்றும் அறிவித்தார்.

இதனிடையே, உத்தரபிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத் இந்த சம்பவத்திற்கு கவலை வெளியிட்டுள்ளார்.

இறந்தவர்களின் குடும்பங்களுக்கு இரங்கலைத் தெரிவிப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேநேரம், காயமடைந்தவர்களுக்கு உரிய சிகிச்சை அளிக்கவும், பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உதவவும் அதிகாரிகளுக்கு அவர் உத்தரவிட்டுள்ளார்.

# தமிழ் நாட்டில் பெண்களுக்கு எதிரான குற்றங்களுக்கு கடுமையான தண்டனை

## திருத்த சட்டமூலத்துக்கு ஆளுநர் ஒப்புதல்



தமிழக சட்டசபையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், பெண்களுக்கு எதிரான பாலியல் குற்றங்களுக்கு கடும் தண்டனை அளிக்கும் வகையில் புதிய திருத்த சட்டமூலத்தை கடந்த 10 ஆம் திகதி தாக்கல் செய்தார்.

2025 ஆம் ஆண்டு குற்றவியல் சட்டங்கள், பெண்களுக்கு துன்பம் விளைவித்தலை தடை செய்கின்ற திருத்த சட்டமூலத்தை அவர் தாக்கல் செய்தார். அதில் பெண்களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமை குற்றங்களுக்கு மரண தண்டனை வழங்கும் வகையிலும், பெண்களுக்கு எதிரான குற்றங்களுக்கு கடுமையான சிறை தண்டனை விதிக்கும் வகையிலும் திருத்தங்கள் இடம்பெற்று இருந்தன.

பெண்களுக்கு எதிரான பாலியல் குற்றங்களுக்கு கடும் தண்டனை அளிக்கும் வகையில் திருத்த சட்ட மூலம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

அதில், பெண்களை பின் தொடர்ந்து சீண்டுபவர்களுக்கும் 5 ஆண்டுகள் வரையில் சிறை தண்டனை வழங்கப்படும்.

ஆசிட் வீச்சு சம்பவங்களில் ஈடுபட்டு கொடுங்காயத்தை ஏற்படுத்துபவர்களுக்கு ஆயுள் தண்டனை, கடுங்காவல் சிறை தண்டனை அல்லது மரண தண்டனை விதிக்கப்படும். ஆசிட்டை வீசுபவர்களுக்கும், வீச முயற்சிப்பவர்களுக்கும் 10 ஆண்டுகளுக்கும் குறையாத மற்றும் ஆயுள் காலம் வரை சிறை தண்டனை கிடைக்கும்.

மேற்கண்ட குற்ற சம்பவங்களில் ஈடுபடுபவர்கள் பிணையில் வெளிவர முடியாது. பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்புக்கு முன்னுரிமை அளிக்கும் வகையில் இந்த திருத்த சட்டமூலம் கொண்டு வரப்பட்டுள்ளது.

இந்த திருத்த சட்டமூலம் ஆளுநர் ஆர்.என்.ரவி ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இந்நிலையில், பாலியல் குற்றங்களுக்கு கடும் தண்டனை வழங்க வழிவகை செய்யும் திருத்த சட்டமூலத்துக்கு ஆளுநர் ஆர்.என்.ரவி ஒப்புதல் அளித்துள்ளார். திருத்த சட்டமூலத்துக்கு ஒப்புதல் வழங்கிய ஆளுநர் அதனை குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைக்க உள்ளார்.





# அமெரிக்க எல்லையில் துருப்புக்களை நிலைநிறுத்துவதற்கு ட்ரம்ப் நடவடிக்கை

அமெரிக்காவில் தெற்கு எல்லையில் ஆயிரத்து 500 துருப்பினரை நிலைநிறுத்துவதற்கு ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நடவடிக்கை எடுத்துள்ளார் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

அதற்கமைய, ஆயிரம் இராணுவ சிப்பாய்களும் 500 கடற்படையினரும் கலிபோர்னியாவின் சான் டியாகோவிற்கும் டெக்சாஸின் எல் பாசோவிற்கும் அனுப்பப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர்கள் தடைகளை மேற்கொள்வது மற்றும் பிற எல்லை பாதுகாப்பு பணிகளில் ஈடுபடுவார்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், அவர்கள் சட்ட அமுலாக்கத்தில் ஈடுபட மாட்டார்கள் என அமெரிக்காவின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அதேநேரம், இரண்டு சீ-17 மற்றும் இரண்டு சீ-130 விமானங்கள், உலங்குவானூர்திகளும் மெக்சிகோவுடனான அமெரிக்க எல்லைக்கு அனுப்பப்படும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

சட்டவிரோத வெளிநாட்டினர் என குறிப்பிடப்படும் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்களை நாடுகடத்துவதற்கு இராணுவ விமானப் போக்குவரத்து பயன்படுத்தப்படும் என அமெரிக்காவின் பதில் பாதுகாப்பு செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.





# தாய்லாந்தில் சட்டப்பூர்வமானது ஒரே பாலினத்தவர் திருமணம்!

LGBTQ+ ஜோடிகளுக்கு நிவாரணம் அளிக்கும் வகையில், தாய்லாந்து ஒரே பாலின திருமணத்தை அங்கீகரித்துள்ளது.

மேலும், பாலின தம்பதிகளுக்கு இருக்கும் அதே உரிமைகளை அவர்களுக்கு வழங்கும் சட்டம் இன்று வியாழக் கிழமை சட்டப்பூர்வமாக நடைமுறைக்கு வந்தது.

ஒரே பாலின திருமணத்தை சட்டப்பூர்வமாக்கிய முதல் தென்கிழக்கு ஆசிய நாடாகிய தாய்லாந்தில் நூற்றுக்கணக்கான தம்பதிகள் சட்டம் அமுலுக்கு வந்த முதல் நாளிலேயே திருமணம் செய்து கொண்டனர்.

தாய்லாந்து வரலாற்று சிறப்புமிக்க திருமண சமத்துவ சட்டமூலத்தை கடந்த ஜூன் மாதம் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை வாக்கெடுப்புடன் நிறைவேற்றப்பட்டது.

இது 2025 ஜனவரி 23 முதல் நடைமுறைக்கு வருகிறது.

தாய்வான் மற்றும் நேபாளத்திற்குப் பின்னர், ஒரே பாலின திருமணத்தை சட்டப்பூர்வமாக்கிய தெற்காசிய நாடுகளில் முதல் இடத்தையும், ஆசியாவில் மூன்றாவது இடத்தையும் பிடித்த நாடாக இதன் மூலம் தாய்லாந்து ஆனது.



தாய்லாந்தில் சம திருமணச் சட்டங்களை இயற்ற வேண்டுமென்று LGBTQ குழுக்கள் மேற்கொண்ட பிரச்சாரத்தின் ஒரு தசாப்த கால போராட்டத்துக்கு மத்தியில் இந்த சட்டம் வந்துள்ளது.

சட்டம் அமுலுக்கு வருவதற்கு முன்னதாக கடந்த வாரத்துக்க முன்னர், தாய்லாந்தின் பிரதமர் பேடோங்டர்ன் ஷினவத்ரா, உயிரியல் பாலினத்திற்கு அப்பாற்பட்ட பாலின அடையாள அங்கீகாரத்தின் அவசியத்தை வலியுறுத்தியிருந்தார்.

2001 ஆம் ஆண்டில் ஒரே பாலின தொழிற்சங்கங்களை அனுமதித்த முதல் நாடு நெதர்லாந்து ஆகும், அதன் பிறகு பல ஆண்டுகளில் உலகம் முழுவதும் 30 இற்கும் மேற்பட்ட நாடுகள் இதைப் பின்பற்றுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

பக்கங்கள் 03

கனடா முரசு

வியாழக்கிழமை 23/01/2025

## கனடா ஏற்றுமதிகள் மீது பெப்ரவரியில் வரி விதிப்பு

கனடாவின் ஏற்றுமதிகள் மீது எதிர்வரும் பெப்ரவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் வரி விதிக்கப்படும் என தெரிவிக்கப் படுகிறது.

அமெரிக்காவின் 02

# பொருளாதார ரீதியில் அமெரிக்காவுக்கு வலியை ஏற்படுத்தத் தயார்: கனடா பிரதமர்



கனடா மீது ட்ரம்ப் வரி விதித்தால், அதைத் திரும்பப் பெறும் வகையில் அமெரிக்காவுக்கு வலியை ஏற்படுத்தத் தயாராக இருப்பதாக கனடா பிரதமர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

தான் அமெரிக்க ஜனாதிபதியாக பதவியேற்றதும் முதல் வேலையாக கனடா முதலான சில நாடுகளுக்கு வரி விதிப்பது தொடர்பிலான ஆவணங்களில் கையெழுத்திட இருப்பதாக ட்ரம்ப் தெரிவித்திருந்தார்.

கனடா மற்றும் மெக்சிகோவிலிருந்து அமெரிக்காவுக்குள் இறக்குமதி செய்யப்படும் அனைத்துப் பொருள்களுக்கும் 25 சதவிகித வரி விதிக்கப்படும் என்று அவர் கூறியிருக்கிறார். 02



# கனடா பொருள்களுக்கு 25 சதவீதம்; சீனா பொருள்களுக்கு 10 சதவீத வரி

### ட்ரம்ப் திட்டம்

சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்கு கூடுதலாக 10 சதவீத வரி விதிக்க அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் திட்டமிட்டுள்ளார்.

பதவியேற்றது முதல் ட்ரம்ப் அதிரடி நடவடிக்கையில் இறங்கியுள்ளார். உலக சுகாதார அமைப்பில் இருந்து வெளியேறுதல், பாரிஸ் பருவநிலை மாற்ற ஒப்பந்தத்தில் இருந்து வெளியேறுதல், அமெரிக்காவின் தென்பகுதி எல்லைகளில் அவசரநிலையைபிரகடனப்படுத்துதல் உள்பட பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்.

இந்நிலையில், சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்கு கூடுதலாக 10 சதவீத வரி விதிக்க ட்ரம்ப் திட்டமிட்டுள்ளார்..

அதேபோல், மெக்சிகோ மற்றும் கனடாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்கு கூடுதலாக 25 சதவீத வரி விதிக்கவும் ட்ரம்ப் திட்டமிட்டுள்ளார்.

03




# 83 மில்லியன் டொலர் பெறுமதியான போதைப் பொருள் கனடாவில் மீட்பு

கனடாவில் சுமார் 83 மில்லியன் டொலர் பெறுமதியான போதைப் பொருள் மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த போதை பொருள்களுடன் இரண்டு மெக்ஸிகோ பிரஜைகளும் நான்கு கனடியர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் மேலும் மூவரை கைது செய்வதற்கு பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மெக்சிகோ போதைப்பொருள் கடத்தல் வலையமைப்புடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் இந்த போதைப் பொருள் கடத்தலை மேற்கொண்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

மிஸ்ஸிசாகாவில் இந்த போதைப் பொருள்கள் மீட்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. யோர்க் பிராந்திய பொலிஸார் கனடிய எல்லை பாதுகாப்பு படை யினர் மற்றும் வின்ட்ஸோர் பொலிஸ் அதிகாரிகள் ஆகியோர் கூட்டாக இணைந்து இந்த போதைப் பொருள் கடத்தல் முயற்சியை முறியடித்துள்ளனர்.

சந்தேக நபர்களிடமிருந்து சுமார் 475 கிலோ கிராம் எடையுடைய கொக்கேய்ன் போதை பொருள் மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## பொருளாதார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அத்துடன், பதவியேற்றதுமே, தான் ஏற்கனவே கூறியபடி, கனடாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்கள் மீது 25 சதவிகித வரி விதிப்பு அமுல்படுத்தப்படலாம் என ட்ரம்ப் மீண்டும் கூறியுள்ளார்.

அந்த வரி விதிப்பு பெப்ரவரி மாதம் 1 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரலாம் என்றும் ட்ரம்ப் தற்போது தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், கனடா மீது ட்ரம்ப் 25 சதவிகித வரி விதித்தால், அதைத் திரும்பப் பெறும் வகையில் அமெரிக்காவுக்கு வலியை ஏற்படுத்தத் தயாராக இருப்பதாக கனடா பிரதமரான ஜஸ்டின் ட்ரூடோ எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கனடா, வலுவான, விரைவான மற்றும் மிக பலமான பழிக்குப் பழி நடவடிக்கைகள் மூலம் அமெரிக்காவுக்கு தக்க பதிலடி கொடுக்கும் என ட்ரூடோ உறுதிபட தெரிவித்துள்ளார்.

ட்ரம்ப் குறித்து தனக்குக் கவலையில்லை என்று கூறியுள்ள ட்ரூடோ, அமெரிக்காவின் இந்த ஜனாதிபதியுடன் பழகுவதில் பெரும் நிலையற்ற தன்மையை தான் எதிர்பார்ப்பதாகவும், இதற்கு முன்பும் தாங்கள் இத்தகைய சூழலைக் கடந்துவந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

## கனடா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புதிய ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் இந்த தகவலை குறிப்பிட்டுள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

டொனால்ட் ட்ரம்ப் ஜனாதிபதி பதவியேற்ற பின்னர் பல்வேறு நிறைவேற்ற அதிகார உத்தரவுகளை பிறப்பித்து வருகின்றார்.

கனடா மற்றும் மெக்சிகோமீது 25 வீத வரியை விதிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

கனடா எல்லைப் பகுதியை மோசமாக துப்பாக்கி பியோகம் செய்வதாகவும் போதை பொருள்கள் கடத்தப்படுவதாகவும், சட்டவிரோத குடியேறிகள் பிரவேசிக்கின்றனர் என்றும் ட்ரம்ப் குற்றம் சுமத்தியுள்ளார்.

உலகின் ஏனைய நாடுகள் மீதும் வரி விதிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.





# கனடாவில் நூதன முறையில் இடம்பெறும் வாகன கொள்ளை

கனடாவில் நூதன முறையில் வாகனங்கள் கொள்ளையிடப்படுகின்றன என பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

வாகன விபத்துக்களை ஏற்படுத்தி வாகனங்கள் கொள்ளையிடப்படுகின்றன என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

அண்மைக்காலமாக இவ்வாறான சம்பவங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளன.

குறிப்பாக டொரன்டோ பெரும்பாக பகுதியில் இவ்வாறான சம்பவங்கள் பதிவாகி வருகின்றன.

இந்த சம்பவங்கள் தொடர்பில் யோர்க் பிராந்திய பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

வாகனங்களுடன் சிறிது அளவிலான மோதலை ஏற்படுத்தி சாரதி வாகனத்திற்கு ஏற்பட்ட சேதம் குறித்து அறிவதற்காக கீழே இறங்கும்போது, சாரதியுடன் கைகலப்பில் ஈடுபட்டு வாகனத்தை கொள்ளையிடும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன என தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறான பல்வேறு சம்பவங்கள் பதிவாகியுள்ளன என தெரிவிக்கப்படுகிறது.

எனவே வாகன விபத்துகளின் போது சாரதிகள் இந்த விடயம் தொடர்பிலும் அவதானம் செலுத்துமாறு கோரப்பட்டுள்ளது.




# இணைய மருத்துவ சேவையில் ஆர்வம் காட்டும் கனடா மக்கள்

கனடாவில் இணைய மருத்துவ சேவைகளை பெற்றுக் கொள்வதற்கு அதிக அளவான மக்கள் ஆர்வம் காட்டுகின்றனர் என தெரிவிக்கப்படுகிறது.

மருத்துவர்களுக்கு நாட்டில் நிலவிவரும் பற்றாக்குறை காரணமாக இவ்வாறு இணைய வழியிலான மருத்துவ சேவைகளை மக்கள் பெற்றுக்கொள்ள விரும்புகின்றனர் என தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் முன்னெடுக்கப்பட்ட ஆய்வு ஒன்றின் மூலம் இந்த விடயம் தெரியவந்துள்ளது.

கனடிய மருத்துவ ஒன்றியம் மற்றும் அபகஸ் டேட்டா என்ற நிறுவனங்கள் கூட்டாக இணைந்து இந்த ஆய்வினை முன்னெடுத்துள்ளது.

இந்த ஆய்வில் பங்கேற்ற பலரும் மருத்துவரை சந்திக்க முடியவில்லை எனவும் இதனால் இணைய வழி மருத்துவ சேவைகளை பெற்றுக் கொள்வதாகவும் தெரிவித்துள்ளனர்.

கனடாவில் சுமார் 20 விதமானவர்களுக்கு குடும்ப நல மருத்துவரின் சேவை தொடர்ச்சியாக கிடைக்க பெறுவதில்லை என தெரிவிக்கப்படுகிறது.

கடந்த காலங்களை போன்று அல்லாது தற்பொழுது மருத்துவர்களின் சேவையைப் பெற்றுக் கொள்வதில் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.